# இணையவழிச் செவ்வியல் தமிழ்த் தொடரடைவு

**மொழித் தொழில்நுட்பத் துறை**
**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
**சென்னை**

## 1. அறிமுகம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் ஆகிய நூல்களைக் கி.பி.6 ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்ட செவ்வியல் நூல்கள் எனத் தேர்ந்தெடுத்து அவைபற்றிய ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

நிறுவனத்தின் ஓர் அங்கமாகச் செயற்பட்டுவரும் மொழித் தொழில்நுட்பத் துறை மேற்குறிப்பிட்ட செவ்வியல் நூல்களுக்கான தரவகம் (corpus) ஒன்றினை உருவாக்கியதுடன் அதைத் தொடர்ந்து இலக்கண, இலக்கியக் கல்வி மற்றும் இயற்கை மொழி ஆய்விற்குப் பயன்படும் பல்வேறு மென்பொருள்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

மொழித் தொழில்நுட்பத் துறையின் முதன்மைத் திட்டமான செவ்வியல் இலக்கியங்களுக்கான தரவக உருவாக்கம் (Corpus Development for Classical Tamil Texts) எனும் திட்டத்தின் கீழ்ப் பல்வேறு கட்டங்களாகக் கீழ் கண்ட இருபது நூல்களுக்கும் தரவகம் உருவாக்கப்பட்டது

## 2. தரவகம்

தரவக உருவாக்கத்தின் முதற்கட்டப் பணியாக இருபது செவ்வியல் தமிழ் நூல்களின் (தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, இறையனார் களவியல்) மூலபாடங்கள், சந்தி பிரித்த பாடங்கள், சொற்கள் பிரித்த பாடங்கள் ஆகிய மூன்று நிலைகளில் தரவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தரவகத்தைப் பயன்படுத்தி **இணையவழிச் செவ்வியல் தமிழ்த் தொடரடைவு** (Online Concordance for Classical Tamil) ஒன்றை இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

## 3. தொடரடைவு

தொடரடைவு என்பது ஒரு நூலில் அல்லது பதிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் வரிசைபடுத்தப்பட்ட பட்டியலாகும். இப்பட்டியலில் சொற்களுடன் அவை இடம்பெறும் தொடர்களும் குறிப்பிடப்பட்டிருக்கும். தொடரடைவி என்பது கொடுக்கப்பட தரவகத்தில் இருந்து சொல்லின் தொடரை உருவாக்கித் தரக்கூடிய கணினி நிரல். இதுவரை ஷேக்ஸ்பியரின் நூல்கள், பைபிள், குர்ஆன் போன்ற நூல்களுக்கு மட்டுமே தொடரடைவி உள்ளது. செவ்வியல் தமிழ் நூல்களுக்கு என இதுவரை தொடரடைவி உருவாக்கப்படவில்லை.

## 4. தரவுகள்

1. தொல்காப்பியம்
2. நற்றிணை
3. குறுந்தொகை
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. பரிபாடல்
7. கலித்தொகை
8. அகநானூறு
9. புறநானூறு
10. திருமுருகாற்றுப்படை
11. பொருநராற்றுப்படை
12. சிறுபாணாற்றுப்படை
13. பெரும்பாணாற்றுப்படை
14. முல்லைப்பாட்டு
15. மதுரைக்காஞ்சி
16. நெடுநல்வாடை
17. குறிஞ்சிப்பாட்டு
18. பட்டினப்பாலை
19. மலைபடுகடாம்
20. இறையனார்களவியல்

## 5. தரவக உருவாக்கம்

### மூலபாடம்

நாற்பத்தொரு செவ்வியல் தமிழ் நூல்களின் தரமான பதிப்புகளைக் கொண்டு தரவகம் (Source Text corpus) உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவகம் தமிழ் அறிஞர்களின் துணைக்கொண்டு, ஆகஸ்டு 26 முதல் 31 - 2013 வரை பயிலரங்கு நடத்தி சரிபார்க்கப்பட்டுச் செம்மைப்படுத்தப்பட்டது.

## 6. சந்தி பிரித்த பாடம்

சந்தி பிரித்த பாடல்களுக்கான தரவகத்தை (Hyphenated Text Corpus) உருவாக்குவதற்காக நெறிமுறைகளை உருவாக்குவதற்கு 21 முதல் 23 டிசம்பர் 2009 வரை மூன்று நாட்கள் பயிலரங்கு நடத்திச் சொற்பிரிப்பு நெறிமுறைக்கான கையேடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## 7. சொற்பிரிப்பு நெறிமுறைகள்

7.1 சொல்லடைவுக்கு அடிப்படையாக இலக்கணச் சொல்லை (Grammatical Word) முடிக்கும் விகுதியின் அடிப்படையில் (Wordclosing Morpheme) பிரிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெயரின் ஒருமை வடிவம் | - | மரம், யானை |
| பன்மை விகுதி பெற்ற வடிவம் | - | மரங்கள், யானைகள் |
| பொதுப்பெயர்களின் 'அத்து', 'வற்று'ச்சாரியை பெற்ற வடிவம் | - | மரத்து, குளத்து |
| வேற்றுமை ஏற்கும் போது வல்லொற்று இரட்டிக்கும் வடிவம் | - | காட்டு, களிற்று |
| பதிலிப்பெயர்களில் 'அன்' சாரியை ஏற்கும் வடிவம் | - | அதன், இதன் |

7.2 பெயர்களில் முடியும் விகுதியைத் தொடர்ந்து வரும் வேற்றுமை உருபு, உம்மை, ஏ, ஆ, ஓ போன்ற இடைச்சொற்கள், இன் சாரியை ஆகியவற்றைப் பிரித்துத் தனிப்பதிவுகளாகத் தர வேண்டும்.

### 7.3 வேற்றுமை உருபு

1. இரண்டாம் வேற்றுமை (-ஐ)

   எயிலை - எயில் + ஐ

2. மூன்றாம் வேற்றுமை (-ஒடு)

   கொடியொடு - கொடி + ஒடு

3. நான்காம் வேற்றுமை (கு, -க்கு, -அக்கு, -உக்கு)

   கரும்பிற்கு - கரும்பு +இன் +கு

சாத்தற்கு - சாத்தன் +கு

மதுரைக்கு - மதுரை + க்கு

மகட்கு - மகள்+கு

கட்கு - கண்+கு

தமக்கு - தம் + அக்கு

எமக்கு - எம் + அக்கு

அவனுக்கு - அவன் + உக்கு

அவளுக்கு - அவள் + உக்கு

4. ஐந்தாம் வேற்றுமை (-இன்)

காக்கையிற்கரிது - காக்கை+இன்+கரிது

இதனின் வட்டமிது - இதன்+இன்+வட்டம்+இது

குரலின் - குரல்+இன்

5. ஆறாம் வேற்றுமை (-அது)

எள்ளது குப்பை - எள்+அது + குப்பை

படையது குழாம் - படை+அது + குழாம்

6. ஏழாம் வேற்றுமை (-கண்)

பொருட்கண் - பொருள்+கண்

மலர்க்கண் - மலர்+கண்

## 7.4 **உம்மை**

1. எண்ணும்மை

புள்ளியும் - புள்ளி+உம் (தொல்.2:4)

உயிர்த்தலும் - உயிர்த்தல்+உம் (தொல்.33:1)

2. முற்றும்மை

ஏழும் - ஏழ் + உம் (தொல்.4:3)

ஐந்தும் - ஐந்து + உம் (தொல்.3:3)

3. சிறப்பும்மை

இசையினும் - இசையின் + உம் (தொல்.10:1)

கிளப்பினும் - கிளப்பின் + உம் (தொல்.372:2)

4. எச்சவும்மை

இயற்கையும் - இயற்கை + உம் (தொல்.16:1)

குறுகலும் - குறுகல் + உம் (தொல்.35:1)

5. அசை

| | | |
|---|---|---|
| மிசையொடும் | - | மிசை + ஒடு + உம் (தொல்.129:2) |
| மரபே தானும் | - | மரபு+ஏ +தான் + உம்(தொல்.594:2) |

6. எதிர்மறை

| | | |
|---|---|---|
| உறழினும் | - | உறழின் + உம் (தொல்.146:2) |
| வரினும் | - | வரின் + உம் (தொல்.200:3) |

7. சாரியை

| | | |
|---|---|---|
| நிகரலும் | - | நிகரல் + உம் (தொல்.481:3) |

8. உம் என்னும் ஈறு

| | | |
|---|---|---|
| உம்மை எண்ணும் | - | உம்மை எண் + உம் (தொல். 772:1) |

9. இழிவு

| | | |
|---|---|---|
| அவனும் வந்தான் | - | அவன் + உம் வந்தான் (பொருள் அடிப்படையில்) |

10. பிற (உம்)

எகர ஒகரத்து இயற்கையும் அற்றே (தொல்.16:1)

* பெயரெச்சம், வினைமுற்றில் வருகின்ற 'உம்' -ஐ பிரிக்கக் கூடாது.

| | |
|---|---|
| இறூஉம் | உட்கும் |
| உணர்த்தும் | ஒக்கும் |

7.5 சொல்லுருபுகள் பிரிக்கப்பட வேண்டும். (மேல், கீழ், முன், பின்…)

| | |
|---|---|
| மேசையின் மேல் | மேசை+ இன்+மேல் |
| கடலின் கீழ் | கடல்+இன்+கீழ் |

7.6 பெயரெச்சத்திற்குப் பின் வரும் வினைப்பின்னுருபுகள் பிரிக்கப்பட வேண்டும். (தொறும், தோறும், கால், பின், பிறகு …)

| | |
|---|---|
| பயில்தொறும் | பயில்+தொறும் |
| நினைத்தொறும் | நினை+தொறும் |
| ஒலித்தக்கால் | ஒலித்த+கால் |
| வாராக்கால் | வாரா+கால் |
| வந்தபின் | வந்த+பின் |

சென்றபிறகு சென்ற+பிறகு

7.7 வினைச்சொற்களில் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், நிபந்தனை வினையெச்சம் ஆகியவை பிரிக்கப்படக் கூடாது. ஆனால் இவ்வினை வடிவங்களைத் தொடர்ந்து வரும் இடைச்சொற்களைப் பிரித்துத்தர வேண்டும்.

| | | |
|---|---|---|
| வருவார் கொல் | - | வருவார் + கொல் |
| வந்தன்றே | - | வந்தன்று + ஏ |
| வருவானா | - | வருவான் + ஆ |

7.8 வினையெச்சத்தை அடுத்து உருபுகள் வரும்பொழுது அவற்றைப் பிரித்துத் தரவேண்டும்.

| | | |
|---|---|---|
| உண்டாங்கு | - | உண்டு+ஆங்கு |

7.9 வினைத்தொகைகளில் வரும் வினையடிகள் பிரிக்கப்பட வேண்டும். ஆனால் வினைத்தொகைகள் மரபுச்சேர்க்கையாக / மரபுத்தொடராக வரும்பொழுது அவற்றைச் சேர்த்துத்தர வேண்டும்.

**வினைத்தொகை**

| | | |
|---|---|---|
| கொல்யானை | - | கொல் + யானை |
| விரிகதிர் | - | விரி + கதிர் |

**மரபுச்சேர்க்கை**

ஊறுகாய்
கலிமா

7.10 அன்மொழித்தொகையைப் பிரிக்க வேண்டாம்

| | |
|---|---|
| பொற்றொடி | 'பெண்' |
| ஏந்திழை | 'பெண்' |
| மெல்லியல் | 'பெண்' |
| ஆயிழை | 'பெண்' |
| விளங்கிழை | 'பெண்' |

7.11 உரிச்சொற்களைப் பிரித்துத்தர வேண்டும்.

| | |
|---|---|
| சாலப்பேசினான் | சால+ பேசினான் |
| உறுபுகழ் | உறு+ புகழ் |
| தவஉயர்ந்தன | தவ+ உயர்ந்தன |
| நனிதின்றான் | நனி+ தின்றான் |

7.12 பண்புத்தொகையினைப் பிரிக்கலாம். பண்படியின் மாற்று வடிவங்களைப் பிரித்து அதன் அடிப்படை வடிவத்துடன் தொடர்புபடுத்திக்காட்ட வேண்டும்.

| | | |
|---|---|---|
| செந்நிலம் | - | செம் + நிலம் |
| சேவடி | - | சே + அடி |
| பசும்பொன் | - | பசும் + பொன் |
| பைம்பொன் | - | பைம் + பொன் |
| பாசடை | - | பாசு + அடை |

7.13 சுட்டுப்பெயரடைகள், அவற்றின் மாற்று வடிவங்கள் பிரிக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| அவ்விடம் | - | அ + இடம் |
| அந்நாள் | - | அ + நாள் |
| ஆயிரு | - | ஆ + இரு |
| ஆயிடை | - | ஆ + இடை |

7.14 உவமைத்தொகை/உவமஉருபு ஆகியவற்றைப் பிரிக்க வேண்டும்.

**உவமைத்தொகை**

| | | |
|---|---|---|
| மதிமுகம் | - | மதி + முகம் |
| பவளவாய் | - | பவளம் + வாய் |
| முத்துப்பல் | - | முத்து + பல் |

**உவம உருபு**

| | | |
|---|---|---|
| முகத்தன்ன | - | முகத்து + அன்ன |
| தேன்போல | - | தேன் + போல |

7.15 எண்ணுப்பெயர்களில் ஈரைந்து, மூவைந்து ஆகியவற்றில் அடையாக வரும் ஈர், மூ ஆகியவற்றைப் பிரிக்க வேண்டும். ஆனால் ஈராயிரம், மூவாயிரம், ஆறாயிரம் போன்ற எண்ணுப்பெயர்களைச் சேர்த்துத்தர வேண்டும்.

7.16 அளபெடுத்துவரும் சொற்களை அவ்வாறே தருதல் வேண்டும்.

## 8. சந்தி பிரித்த பாடம் (Hibernated Text Corpus)

சொற்பிரிப்புப் பாடங்களுக்கான நெறிமுறையை உருவாக்க மொழியியல், தமிழ் மற்றும் கணினித் துறை சார்ந்த பேராசிரியர்களைக் கொண்டு துறையின் சார்பாக மார்ச்சு 10 முதல் 19 - 2010 வரை பத்து நாள் பயிலரங்கம் நடத்திச் சொற்கள் பிரித்த பாடங்களுக்கான நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன.

சொற்கள் பிரித்த பாடங்களுக்கான தரவகத்தை நெறிப்படுத்துவதற்காக மொழியியல், தமிழ் மற்றும் கணினித் துறை சார்ந்த பேராசிரியர்களைக் கொண்டு துறையின் சார்பாக மார்ச்சு 21 முதல் 30 - 2011 வரை பத்து நாள் பயிலரங்கம் நடத்திச் சொற்கள் பிரித்த பாடங்களுக்கான நெறிமுறை உருவாக்கப்பட்டது.

**தொடரடைவு**

மேற்குறிப்பிட்ட இருபது நூல்களுக்கான தரவுகளைப் பயன்படுத்தி இணையவழிச் சங்க இலக்கியத் தொடரடைவு உருவாக்கப்பட்டுள்ளது.

## 9. தொடரடைவின் பயன்கள்

- ஒரு சொல் செவ்வியல் தமிழ் நூல்களில் எத்தனை முறை வருகின்றது என்பதைத் தொடரடைவு மூலம் அறியலாம்.
- ஒரு சொல் அதன் தொடரியல் சூழுலுக்கேற்பச் சொற்பொருண்மை பெறுவதைத் தொடரடைவு மூலம் அறியலாம்
- வரலாற்று முறை இலக்கணம், வரலாற்று முறை அகராதி உருவாக்குவதற்குத் தொடரடைவு பயன்படுகிறது.
- வேர்ச் சொல்லாய்வுகள், அகராதிகள், சொற்களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள், கலைக்களஞ்சியங்கள் தயாரிப்பதற்கும் தொடரடைவு பயன்படுகின்றது.
- இயற்கை மொழி ஆய்விற்கும் மொழி ஆய்விற்கும் மொழி சார்ந்த துறைகளுக்கும், பின்வரும் மென் பொருள் உருவாக்கத்திற்கும் தொடரடைவு பயன்படுகிறது.
- மின் அகராதி (Electronic Dictionary)
- உருபனியல் பகுப்பான் (Morphological Analyzers)
- உருபனியல் உருவாக்கி (Morphological Generator)

- சொல் திருத்தி (Spell Checker)
- இலக்கணத் திருத்தி (Grammar Checker)
- இயந்திர மொழிபெயர்ப்பு (Machine Translation)
- சொல்வகைக் குறிப்பான் ( POS tagger)
- தொடர் பகுப்பி (Parser)
- மொழிக்கல்வி (Language Teaching)
- தரவக வழிக் கல்வி (Corpus Based Teaching)
- தரவகவழி அகராதி (Corpus Based Dictionary)
- தரவகவழி மொழிபெயர்ப்பு (Corpus Based Translation)
- இணைய வழித் தரவுத்தளம் (Corpus Database)

## 10. சங்க இலக்கியத் தொடரடைவி

சங்க இலக்கியத் தொடரடைவி பயனாளர் எளிதில் பயன்படுத்தும் வகையில் பயனாளர் இடைமுகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் சொல், சங்க இலக்கிய நூல்கள் பட்டியல், 'தேடு' எனும் குமிழி கொடுக்கப்பட்டுள்ளன. இதில் சங்க இலக்கிய நூல்களின் பட்டியலை ஒரு தெரிவுப்பட்டியலில் சங்க இலக்கியம், இலக்கணம், இலக்கியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு, காப்பியம் என வகைப்படுத்தியும் தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், இறையனார்களவியல் எனத் தனிப்பட்ட நூல்களின் பட்டியலும் கொடுக்கப்பட்டு உள்ளது.

பயனாளர் குறிப்பிட்ட சொல்லைத் தட்டச்சு செய்து தெரிவுப்பட்டியலில் உள்ள நூற்பட்டியலின் தேவையான பிரிவை அல்லது நூலைத் தெரிவு செய்து 'தேடு' எனும் குமிழைத் தெரிவு செய்தால் குறிப்பிட்ட அந்தச் சொல்லின் தொடரைப் பெறலாம். இதில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற சொல்லின் பாடல் அடி, மூலபாடம், பிரிக்கப்பட்ட வடிவம், நூல், பாடல் எண், அடி எண் ஆகியவற்றைப் பெறலாம்.




| இடம்பெற்ற அடிகள் : 14 | | மொத்த அடிகள் : 37543 | | | |
|---|---|---|---|---|---|
| மூலபாடம் | சொற்கள்பிரித்தபாடம் | சந்திபிரித்தபாடம் | நூல் | பாடல்எண் | அடி |
| மாயா வியற்கைப் பாவையிற் | மாயா இயற்கை பாவை இன் | மாயா இயற்கைப் பாவையின் | நற் | 201 | 11 |
| மணமகி ழியற்கை காட்டி யோயே. | மணம் மகிழ் இயற்கை காட்டியோய் ஏ. | மணம் மகிழ் இயற்கை காட்டியோயே. | குறு | 229 | 7 |
| தொன்முறை யியற்கையின் மதியொ …… | தொல் முறை இயற்கை இன் மதி ஒ | தொல் முறை இயற்கையின் மதியொ | பரி | 2 | 1 |
| பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும் | பண்டு உம் இ உலகத்து இயற்கை அஃது இன்று உம் | பண்டும் இ உலகத்து இயற்கை அஃது இன்றும் | கலி | 22 | 3 |
| விரைசெல லியற்கை வங்கூ ழாட்டக் | விரை செலல் இயற்கை வங்கூழ் ஆட்ட | விரை செலல் இயற்கை வங்கூழ் ஆட்டக் | அக | 255 | 4 |
| மரிதுபெறு சிறப்பிற் காமத் தியற்கையு | அரிது பெறு சிறப்பு இன் காமத்து இயற்கை உம் | அரிது பெறு சிறப்பின் காமத்து இயற்கையும் | அக | 353 | 5 |
| வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ | வான் வழங்கு இயற்கை வளி பூட்டினை ஒ | வான் வழங்கு இயற்கை வளி பூட்டினையோ | அக | 384 | 9 |
| கைம்பெரும் பூதத் தியற்கை போலப் | ஐம்பெரும்பூதத்து இயற்கை போல | ஐம்பெரும்பூதத்து இயற்கை போல | புற | 2 | 6 |
| இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும் | இயற்கை அல்லன செயற்கை இல் தோன்றின் உம் | இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும் | புற | 35 | 28 |
| இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனால் | இருவீர் வேறல் இயற்கை உம் அன்று ஏ அதனால் | இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால் | புற | 45 | 6 |
| புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை | புதுவது அன்று இ உலகத்து இயற்கை | புதுவது அன்று இவ் உலகத்து இயற்கை | புற | 76 | 2 |
| சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ | சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ | சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ | திரு | 0 | 87 |

## 11. மேம்பட்ட தேடல்

சங்க இலக்கியத் தொடரடைவியைப் பயன்படுத்தி மேலும் மேம்பட்ட தேடல்களைப் பெறுவதற்க்கு "மேம்பட்ட தேடல்" (Advance Search) என்னும் குமிழ் இணைக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி மேலும் மூன்று வகையான மேம்பட்ட தேடல்களைப் பெறலாம்.

11.1 ***'சொல்முதல்'*** இதில் உரைப்பெட்டியில் தட்டச்சு செய்யப்பெற்ற சொல்லின் தொடக்கச் சொல்லின் தொடரடைவைப் பெறலாம்.

11.2 ***'சொல்இறுதி'*** இதில் உரைப்பெட்டியில் தட்டச்சு செய்யப்பெற்ற சொல்லின் இறுதிச்சொல்லின் தொடரடைவைப் பெறலாம்.

11.3 ***'சொல் எங்கும்'*** இதில் உரைப்பெட்டியில் தட்டச்சு செய்யப்பெற்ற சொல் எந்த வடிவில் (தொடக்க சொல், இடைச்சொல், இறுதிச்சொல்) இருந்தாலும் முடிவினைப் பெறலாம். இந்த மூன்று மேம்பட்ட தேடலிலும் தெரிவுப்பட்டியலில் உள்ள வகைகள் இணைக்கப்பட்டுள்ளன.




சொல் [மா] [இலக்கியம் ▾] [தேடு]

மேம்பட்ட தேடல்

○ சொல்முதல் ◉ சொல்இறுதி ○ சொல்எங்கும்

[தேடு]

இடம்பெற்ற அடிகள் : 20 | மொத்த அடிகள் : 37543

| மூலபாடம் | சொற்கள்பிரித்தபாடம் | சந்திபிரித்தபாடம் | நூல் | பாடல்எண் | அடி |
|---|---|---|---|---|---|
| புள்ளுநிமிர்ந் தன்ன பொலம்படைக் கலிமா | புள்ளு நிமிர்ந்து அன்ன பொலம் படை கலி மா | புள்ளு நிமிர்ந்து அன்ன பொலம் படைக் கலி மா | நற் | 78 | 9 |
| விரியுளைப் பொலிந்த வீங்குசெலற் கலிமா | விரி உளை பொலிந்த வீங்கு செலல் கலிமா | விரி உளைப் பொலிந்த வீங்கு செலல் கலிமா | நற் | 121 | 8 |
| விசும்புகடப் பன்ன பொலம்படைக் கலிமாப் | விசும்பு கடப்பு அன்ன பொலம் படை கலி மா | விசும்பு கடப்பன்ன பொலம் படைக் கலி மா | நற் | 361 | 3 |
| பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப் | பல் நூல் மாலை பனை படு கலிமா | பல் நூல் மாலைப் பனைப் படு கலிமாப் | குறு | 173 | 2 |
| உளைப்பொலிந்த மா | உளை பொலிந்த மா | உளைப் பொலிந்த மா | பதி | 22 | 17 |
| பாய்ந்தாய்ந்த மா | பாய்ந்து ஆய்ந்த மா | பாய்ந்து ஆய்ந்த மா | பதி | 69 | 7 |
| இன்னா தம்மவது தானே பன்மா | இன்னாது அம்ம அது தான் ஏ பல் மா | இன்னாது அம்ம அது தானே பல் மா | பதி | 83 | 6 |
| மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா | மண் பரிய வானம் வறப்பின் உம் மன்னுக மா | மண் பரிய வானம் வறப்பினும் மன்னுக மா | பரி | 8 | 129 |
| அகவரும் பாண்டியு மத்திரியு மாய்மாச் | அகவு அரும் பாண்டி உம் அத்திரி உம் ஆய் மா | அகவு அரும் பாண்டியும் அத்திரியும் ஆய் மாச் | பரி | 10 | 16 |
| லுறீஇயா ளீத்தவிம் மா; | உறீஇயாள் ஈத்த இ மா | உறீஇயாள் ஈத்த இம் மா | கலி | 139 | 19 |
| மெழினுத லீத்தவிம் மா ; | எழில் நுதல் ஈத்த இ மா | எழில் நுதல் ஈத்த இம் மா | கலி | 139 | 25 |
| நேரிழை யீத்தவிம் மா; | நேரிழை ஈத்த இ மா | நேரிழை ஈத்த இம் மா | கலி | 139 | 31 |
| நன்னுத லீத்தவிம் மா; | நல் நுதல் ஈத்த இ மா | நல் நுதல் ஈத்த இம் மா | கலி | 140 | 16 |



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
இணையவழிச் செவ்வியல் தமிழ்த் தொடரடைவு
மொழித் தொழில்நுட்பத் துறை

சொல் பா திருமுருகாற்றுப்படை தேடு

மேம்பட்ட தேடல்

சொல்முதல் சொல்இறுதி சொல்எங்கும்

தேடு

| இடம்பெற்ற அடிகள் : 12 | | மொத்த அடிகள் : 37543 |
|---|---|---|

| மூலபாடம் | சொற்கள்பிரித்தபாடம் | சந்திபிரித்தபாடம் | நூல் | பாடல்எண் | அடி |
|---|---|---|---|---|---|
| சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச் | சீர் திகழ் சிலம்பு அகம் சிலம்ப பாடி | சீர் திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடிச் | திரு | 0 | 40 |
| பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச் | பார் முதிர் பனி கடல் கலங்க உள் புக்கு | பார் முதிர் பனிக் கடல் கலங்க உள் புக்குச் | திரு | 0 | 45 |
| கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப் | கழல் கண் கூகை ஒடு கடும் பாம்பு தூங்க | கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப் | திரு | 0 | 49 |
| வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா | வென்று அடு விறல் களம் பாடி தோள் பெயரா | வென்று அடு விறல் களம் பாடித் தோள் பெயரா | திரு | 0 | 55 |
| வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப் | வரி புனை பந்து ஒடு பாவை தூங்க | வரிப் புனை பந்தொடு பாவை தூங்கப் | திரு | 0 | 68 |
| பாடின் படுமணி யிரட்ட வொருகை | பாடு இன் படு மணி இரட்ட ஒரு கை | பாடு இன் படு மணி இரட்ட ஒரு கை | திரு | 0 | 115 |
| வாங்கப் பன்னிரு கையும் பாற்பட வியற்றி | ஆங்கு அ பன்னிரு கை உம் பால் பட இயற்றி | ஆங்கு அப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி | திரு | 0 | 118 |
| பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப் | பாம்பு பட புடைக்கும் பல் வரி கொடும் சிறை | பாம்பு படப் புடைக்கும் பல் வரிக் கொடும் சிறைப் | திரு | 0 | 150 |
| திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல | இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல | இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல | திரு | 0 | 182 |
| நாவியன் மருங்கி னவிலப் பாடி | நா இயல் மருங்கு இல் நவில பாடி | நா இயல் மருங்கில் நவிலப் பாடி | திரு | 0 | 187 |
| நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி | நறும் புகை எடுத்து குறிஞ்சி பாடி | நறும் புகை எடுத்துக் குறிஞ்சி பாடி | திரு | 0 | 239 |

## 12. முடிவைப் பெற

சங்க இலக்கியத் தொடரடைவியில் பெறப்பட்ட முடிவுகளைப் பெற மூன்று வகையான குமிழ்கள் தரப்பட்டுள்ளன. அவை ‘**மூலபாடம்**’, ‘பிரித்த பாடம்’ மற்றும் ‘**அனைத்தும்**’. இதில் ‘மூலபாடம்’ எனும் குழிழைத் தெரிவு செய்வதன் மூலம் மூலபாடம், நூல், பாடல் எண், அடி எண் ஆகிய முடிவுகளை பனுவல் வடிவில் பெறலாம். ‘பிரித்தபாட*ம்*’ எனும் குழிழைத் தெரிவு செய்வதன் மூலம் பிரிக்கப்பட்ட வடிவம், நூல், பாடல் எண், அடி எண் ஆகிய முடிவுகளை பனுவல் வடிவில் பெறலாம். ‘***அனைத்தும்***’ எனும் குழிழைத் தெரிவு செய்வதன் மூலம் பிரிக்கப்பட்ட வடிவம், மூலபாடம், நூல், பாடல் எண், அடி எண் ஆகிய முடிவுகளைப் பனுவல் வடிவில் பெறலாம். இவ்வாறு தொடரடைவியில் இருந்து பெறப்பட்ட முடிவுகளைப் பனுவலாகத் (Text file) தரவிரக்கம் செய்யும் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

## நூற்கள் பட்டியல்


தொல்காப்பியம் - வேங்கடராமையா, கே. எம்., ச. வே. சுப்பிரமணியன், ப. வெ. நாகராசன் (பதி). திருவனந்தபுரம்: பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம். 1996.

நற்றிணை - நாராயணசாமிஐயர் பின்னத்தூர், அ. (பதி). சென்னை: சைவவித்தியா நூற்பாலனயந்திரசாலை. 1915.

குறுந்தொகை - சாமிநாதையர், உ. வே. (பதி) சென்னை: டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம். 2009.

ஐங்குறுநூறு - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: கபீர் அச்சுக்கூடம், 1944. (மூன்றாம் பதிப்பு).

பதிற்றுப்பத்து - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: லிபர்ட்டி அச்சுக்கூடம். 1941. (மூன்றாம் பதிப்பு).

பரிபாடல் - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: கேசரி அச்சுக்கூடம். 1935. (இரண்டாம் பதிப்பு)

கலித்தொகை - அனந்த ராமையர், இ.வை. (பதி). சென்னை: நோபில் அச்சுக்கூடம். 1930.

அகநானூறு - வேங்கடசாமி நாட்டார், ந. மு. (பதி). திருநெல்வேலி: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1943.

புறநானூறு - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம். 1935. (மூன்றாம் பதிப்பு)

பத்துப்பாட்டு - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: கேசரி அச்சுக்கூடம். 1931. (முதற்பதிப்பு)

நாலடியார் - ஸரஸ்வதி மஹால் (பதி) தஞ்சாவூர்: தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு. 1953.

நான்மணிக்கடிகை - வையாபுரிப்பிள்ளை, ச. (பதி), சென்னை: சக்தி காரியாலயம். 1944.

கார் நாற்பது - கோவிந்தராஜ முதலியாரவர்கள், கா. ர. (பதி). சென்னை: மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை. 1917.

களவழி நாற்பது - அனந்த ராமையர், இ.வை. (பதி). சென்னை: நோபில் அச்சுக்கூடம். 1931.

இனியவை நாற்பது - வையாபுரிப்பிள்ளை, எஸ். (பதி). சென்னை: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம். 1949.

இன்னா நாற்பது - வேங்கடசாமி நாட்டார், நா.மு. (பதி). சென்னை: கழக வெளியீடு. 1935. (இரண்டாம் பதிப்பு)

திணைமொழி ஐம்பது - நடராசப் பிள்ளை, அ. (பதி). சென்னை: கழக வெளியீடு 1936.

ஐந்திணை ஐம்பது - இராகவையங்கார், ரா. (பதி). மதுரை: செந்தமிழ்ப் பிரசுரம். 1903.

ஐந்திணை எழுபது - அனந்த ராமையர், இ.வை. (பதி). சென்னை: நோபில் அச்சுக்கூடம். 1931.

திணைமாலை நூற்றைம்பது - நடராசபிள்ளை, அ. (பதி). சென்னை: கழக வெளியீடு. 1936.

திருக்குறள் - ஆறுமுகநாவலர் (பதி). சென்னை: வாணிநிகேத அச்சுக்கூடம் 1861.

திரிகடுகம் - புன்னைவனநாதன், பு. சி. (பதி). திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1936.

ஆசாரக்கோவை - செல்வக்கேசவராய முதலியார், தி. (பதி). எஸ்.பி.சி.கே. பிரஸ், வேப்பேரி, சென்னை. 1918.

பழமொழி நானூறு - செல்வக்கேசவராய முதலியார், தி (பதி). சென்னை: எஸ். பி. கே.சி பிரஸ். 1917.

சிறுபஞ்ச மூலம் - கழக வெளியீடு (பதி). திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1936.

முதுமொழிக்காஞ்சி - செல்வக்கேசவ முதலியார், தி. (பதி). சென்னை: எஸ்.பி.சி.கே. பிரஸ். 1919.

ஏலாதி - இராஜகோபாலப்பிள்ளை, கோ. (பதி). சென்னை: மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை. 1924.

கைந்நிலை - அனந்தராமையர், இ.வை. (பதி). சென்னை: நோபில் அச்சுக்கூடம், 1931.

சிலப்பதிகாரம் - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: கமர்சியல் அச்சுக்கூடம். 1920 (இரண்டாம் பதிப்பு).

மணிமேகலை - சாமிநாதையர், உ. வே. (பதி). சென்னை: கமர்சியல் அச்சுக்கூடம். 1921 (இரண்டாம் பதிப்பு).

முத்தொள்ளாயிரம் - இராகவையங்கார், ரா. (பதி). மதுரை: தமிழ்ச் சங்கப் பதிப்பு. 1905.

இறையனார் அகப்பொருள் - தாமோதரம்பிள்ளை, சி. வை. (பதி). சென்னை: வி. எண். ஜூப்ளி பிரஸ். 1899. (இரண்டாம் பதிப்பு)

# உருவாக்கம்

மொழித் தொழில்நுட்பத் துறை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

சென்னை